
# 3.பிட்கேர்ன் தீவுகள்




பிட்கேர்ன் இருப்பிட வரைபடம்

வெறும் 48 பேர் மட்டும் வாழும் பிட்கேர்ன் என்ற ஒரு நாடு உலகில் இருக்கிறது என்றால் நம்பமுடிகிறதா? தென்பசிப்பிக் கடலில் மிதக்கும் இந்தக் குட்டி அதிசயத்தைப் பற்றிக் கேள்வியுற்று செய்திகளைத் தேடியபோது வியப்பிற்குமேல் வியப்பு ஏற்பட்டது. தனிக்கொடி, தனிச்சின்னம், தனி நாட்டுப்பண் இவற்றுடன் விளங்கினாலும் ஐநா சபையின் உலக நாடுகளின் பட்டியலில் சுயாட்சி செய்யவியலா நிலப்பகுதி என்று உள்ளது. எனினும் உலகின் சிறிய குடியரசு என்ற சிறப்புக்குரியது. பசிப்பிக் பகுதியில் பிரிட்டனின் கடைசி குடியேற்ற நாடாக இருந்து சுயாட்சி பெற்று பிரிட்டனின் பாதுகாவலுக்கு உட்பட்ட நாடாக விளங்குகிறது. 4 எரிமலைத்தீவுகளின் தொகுதியாக உள்ள பிட்கேர்ன், ஹெண்டர்சன், டியூசி, ஓயினோ ஆகியன இதற்குள் அடக்கம். ஒன்றுக்கொன்று பல நூறு கிலோமீட்டர்கள் தள்ளி

இருக்கும் இவற்றின் மொத்த பரப்பே 47 சதுர கிலோமீட்டர்கள் தாம். இரண்டாவது பெரிய தீவாகிய பிட்கேர்னில் மட்டுமே மக்கள் வாழும் சூழல் உள்ளது. மற்ற மூன்றும் எளிதில் நெருங்கமுடியா புவியியல் சிக்கல்களும் தடைகளும் கொண்டவை.



**பிட்கேர்ன் தீவு**

03.07.1767 அன்று ஷாலோ என்று பிரிட்டிஷ் கப்பலிலிருந்து 15 வயது சிறுவன், **ராபர்ட் பிட்கேர்ன்**, இந்தத்தீவை அடையாளம் காட்டியதால் சிறுவனின் பெயர் இதற்குச் சூட்டப்பட்டது. பிரித்தானிய அரசியின் ஆணைப்படி 26.10.1788-இல் **பவுண்டி** என்ற கப்பல், கேப்டன் வில்லியம் பிளிக் தலைமையில் தகிதித் தீவிற்கு உலகை ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு 43,590 கி.மீ சாகச பயணம் தொடங்கியது. தகிதி தீவில் மிகுதியாய் விளைவதும், பலாக்காய் போன்று காட்சியளிப்பதுமாகிய ரொட்டிபழச்(Breadfruit)செடிகளைப் பறித்துகொண்டு வந்து மேற்கிந்தியத்தீவுகளில் அடிமைகளின் மலிவான உணவிற்காக எடுத்துச் சென்று நடவேண்டுமென்பதே பயணநோக்கம்.



வரலாற்றை மாற்றிய ரொட்டிப்பழம்



படகுத் துறை

தகிதியில் 5 மாதம் தங்கி காலையில் செடிகளைப் பறித்தும், இரவில் தகித்தியப்பெண்களுடன் மகிழ்ந்திருந்தும் அவர்கள் சொர்க்கம் அனுவித்தனர் .பணிமுடிந்து கப்பல் கிளம்ப கேப்டன் அறிவித்தவுடன் குழுவினர் பலர் தந்தையாகும் நிலையில் இருந்ததால் அரைமனதுடன் கிளம்பினர். பவுண்டி கப்பல் நடுக்கடலில் பயணித்துக்கொண்டிருந்த 3 வது வாரத்தில் பிளட்ஜர் கிறிஸ்டியன் என்ற மாலுமியின் தலைமையில் 28.04.1789 அன்று கப்பலில் கலகம் வெடித்தது.



பவுண்டி கப்பல் கலகம்

கேப்டன் பிளிக்கையும், அவருக்குத் துணைநின்ற 18 மாலுமிகளையும் 23 அடி நீள படகில் ஏற்றிக் கடலில் துரத்தியடித்தனர். அவர்கள் 5823 கி.மீ தூரம் அலைந்து திரிந்து டச்சு கிழக்கு தைமூரை அடைந்து, பின் இங்கிலாந்திற்குக் கலகக்காரர்களைப் பற்றிப் புகார் கூறிய பின் அவர்களைத் தண்டிக்க கடற்படை கிளம்பியது.



பிட்கேர்ன் மேற்குக் கடற்கரை

இதற்கிடையே பிளட்ஜர் கிறிஸ்டியன் தலைமையில் கப்பலைக்கடத்திய கலகத்தினர் தகிதி திரும்பி 6 பாலினேசிய ஆண்கள், 18 பெண்கள், ஒரு குழந்தையுடன் மீண்டும் கப்பலில் 9 மாதம் பாதுகாப்பான இடத்தைத்தேடித் திரிந்து 23.01.1790 இல் கண்டறிந்த யாருமில்லா இடமே பிட்கேர்ன் தீவாகும். வரைபடத்தில் இத்தீவு தவறாகக் குறிக்கப்பட்டிருந்ததால் பிரித்தானியக் கடற்படை இதைத் தேடிக்காண்பது அரிது. அப்படியே வந்தாலும் பாறைகள் நிறைந்த இத்தீவில் கப்பலை நிறுத்துவது கடினம். அப்படியும் வந்துவிட்டாலும் அடையாளம் காணமுடியாதபடி அவர்கள் கடத்திவந்து கரையோரும் நிறுத்தி வைத்த பவுண்டி கப்பலை எரித்து மூழ்கடித்தனர். அதன்பிறகு வேறுவழியின்றி இத்தீவில் நிரந்தரமாகத் தங்க அவர்கள் விதிக்கப்பட்டவர்களாயினர். எரிமலைகுழம்பு தந்த வளமான பூமியில் உழவும், மாசற்ற கடலில் மீன் பிடிப்பும் அவர்கள் வாழ்க்கையை வளமாக்கினாலும், யாரும் நீண்ட நாள் வாழவில்லை. சில ஆண்டுகளில் அவர்களிடையை நிகழ்ந்த பூசல்களாலும், காமத்தாலும், மதுவாலும், நோயாலும் குடியேறிகளில் பலரும் நலிந்து போய் இறந்தனர். இளைய தலைமுறையினர் தவிர(34 பெண்களும், குழந்தைகளும்) ஜான் ஆடம்ஸ் என்பவர் மட்டுமே கடைசி கலகக்காரராக உயிரோடு இருந்தார். நடந்த அவலங்களைக் களைய கப்பலில் கொண்டுவந்திருந்த பைபிளின் வழி புது வாழ்வை மக்களுக்குப் போதித்து அனைவரையும் கிறித்துவத்தில் ஈடுபடச்செய்தார். 1808 இல் டோபாஸ் என்ற அமெரிக்கக் கப்பல் முதல்முறையாக இத்தீவருகே வந்து மாலுமிகள் இத்தீவுக்குள் நுழைந்தனர்.18 ஆண்டுகள் பிற மனிதர்களோடு தொடர்பின்றி

இருந்த தனிமையை அமெரிக்கர்கள் முடிவுக்குக் கொண்டு வந்தனர். எஞ்சிய குற்றவாளியான ஜான் ஆடம்சிற்குப் பொது மன்னிப்புக் கிடைக்கச்செய்தனர். பின் அங்கு செவன்த் டே அன்வெண்டிஸ்டு என்ற கிறித்துவ சபைக்கு மக்கள் மாறினர். 1838- இல் இத்தீவு பிரிட்டிஷ் குடியேற்ற நாடானது. மக்கள் இல்லாப் பிற 3 தீவுகளும் பிட்கேர்னுடன் இணைக்கப்பட்டன. 1850 இல் இத்தீவின் மக்கள்தொகை பெருகியதால் பிரிட்டன் உதவியுட்ன 193 பேர்கள் 5 வார கடல்பயண தூரத்தில் உள்ள நார்போக் தீவில் குடியேற்றப்பட்டனர். ஆனால் பிட்கேர்னைப் பிரிய முடியாது 49 பேர் திரும்பி வந்தனர்.1914- இல் பனாமா கால்வாய் வெட்டப்பட்டவுடன் நியூசிலாந்துடன் தொடர்பு ஏற்பட்டது. வாரம் ஒரு கப்பல் இந்த வழியே செல்லும் வாய்ப்பு கிடைத்தது. 1937 இல் மிகுந்த அளவாக இதன் மக்கட்தொகை 233 ஆனது. நியூசிலாந்துடன் ஏற்பட்ட தொடர்பால் பலரும் நியூசிலாந்தில் குடியேறத் தொடங்கினர். கடைசியாக, டிசம்பர் 2009 இல் நடந்த தேர்தலில் வாக்காளர்கள் 45 பேரே. ஜூலை 2010 கணக்கெடுப்பில் மொத்த மக்கள் 48 பேர். உலகில் மிகக்குறைந்த மக்கள் தொகைகொண்ட நாடாக பிட்கேர்ன் தொடர்கிறது.



சுற்றுலாத்துறைக்குச்சொந்தமான சிறு கப்பல் எம்.வி கிளேமார்-11

தென்னமெரிக்காவின் பெருவிலிருந்தும், நியூசிலாந்திலிருந்தும் சம தூரத்தில் தென்பசிப்பிக் கடலில் மிதக்கும் இந்த தீவில் அரிய இயற்கை வளங்கள் பல உண்டு. ஆனால் நதியே இல்லை. மழைநீர், நிலத்தடிநீர், காட்டாறுகள் நன்னீர் அளிக்கின்றன. இத்தீவில் மட்டுமே காணப்படும் 9 வகைத் தாவரங்களும், 20 வகையான பறவைகளும் , பேருருவம் கொண்ட ஆமைகளும் ஆர்வத்திற்குரியன. 6 அடி நீளமுள்ள இந்த அரிய ஆமையின் எடை 400 கிலோ. இது சராசரியாக 100 ஆண்டுகள் உயிர்வாழும். தீவின் வளமான சமவெளியில் வாழை, பப்பாளி, அன்னாசி, காரட், தர்பூசணி, தென்னை, ஆரோரூட், சக்கரவள்ளி, தக்காளி, பட்டாணி, கரும்பு ஆகியவை செழிக்கின்றன. கடற்கரையொட்டிய இடங்களில் மாங்கனீசு, இரும்பு, செம்பு, தங்கம், வெள்ளி, துத்தநாகம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன.



பள்ளி மாணவர்களுடன் விருந்தினர்

நோயற்ற மிகச்சிறந்த வகை தேனீக்கள் இங்குள்ளதால், உலகிலேயே மிகத்தரமான தேன் இங்கு எடுக்கப்படுகிறது. நியூசிலாந்திற்கும், இங்கிலாந்திற்கும் பெருமளவில் ஏற்றுமதியாகிறது. இத்தேனை எலிசபெத் ராணியும், சர்லஸ் இளவரசரும் மிக விரும்பி அருந்துகிறார்களாம். இங்குள்ள மக்கள் சிறந்த கைவினைஞர்கள். மீன்கள், பறவைகள், முன்னோர் வந்த பவுண்டி கப்பல் இவற்றை மரவேலைப்பாடுகளில் உயிர்ப்பிப்பவர்கள். கைவினைப்பொருள்களுடன், காசுகள், அஞ்சல் தலைகள் சேகரித்தும் வருவாய் ஈட்டுகிறார்கள்.



**துன்பமலை மீது 6.4 கி.மீ சாலை**

இங்கு விமானநிலையமோ, துறைமுகமோ இல்லை.எலிகாப்டர் கூட வந்து இறங்கு முடியாது. ஆழமற்ற சிறு துறையிலிருந்து, கடலில் நிற்கும் கப்பல்களுக்கு நீள்படகுகளில் சென்று வணிகம் செய்கிறார்கள். அரிதாக சொகுசுக்கப்பலில் வருவோர் இங்கு ஒருநாள் தங்கிவிட்டுச்செல்வதுண்டு. நீள்படகு நிற்கும் துறை, பவுண்டி கப்பலின் நினைவாக பவுண்டி பே(Bounty bay) என்று அழைக்கப்படுகிறது. எரியூட்டப்பட்ட பவுண்டி கப்பல் இன்னும் கடலுக்குள் தெரிவதை 1957 இல் இங்கு வந்து நேஷனல் ஜியாகரபிக் குழுவினர் கண்டறிந்தனர். பவுண்டி பே துறையை ஒட்டியே பல வீடுகள் காணப்படுகின்றன. நாட்டின் தலைநகரான, முக்கிய பகுதி கடைசிக் கப்பல் கிளர்ச்சியாளர் ஜான் ஆடம்சின் நினைவாக **ஆடம்ஸ் டவுன்** என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒருவரின் பிறந்தநாளிலோ , அல்லது ஒரு கப்பல் இங்கு வரநேரும்போதோ மொத்த சமூகமே ஆடம்ஸ் டவுன் சதுக்கத்தில் ஒன்றுகூடி பொதுவிருந்துண்டு மகிழும்.



பயணிகள் வந்து இறங்கல்

மீன்பிடித்தலும். நீச்சலும் மிகுதியான பொழுதுபோக்கு. 16-65 வயது வரை உள்ளவர்கள் சாலைகளைப் போடுவதும் பராமரிப்பதும் கட்டயாமாக்கப்பட்டுள்ளது. 6.4 கி.மீ சாலை பவுண்டி பேயிலிருந்து ஆடம்ஸ் டவுன் வரை உள்ளது. ஆண்களும் பெண்களுமாக 15 பேர்கள் மட்டும் நல்ல உடல் வலிமையுடன் உழைப்பவர்களாக உள்ளனர். மொத்த மக்கள் 9 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. அதுவும் கிறிஸ்டியன், வாரன், யங்க், ப்ரவுன் என்ற 4 பழைய மனிதர்களின் பெயர்களைத் தாங்கும் வாரிசுகளே. 5-16 வரை கல்வி இலவசம்; கட்டாயம். ஒரே பள்ளியில், நியூசிலாந்து பாடத்திட்டத்தின்படி, நியூசிலாந்தில் பதிவு செய்யப்பட்ட ஆசிரியர்களால் கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலம் ஆட்சிமொழியாயினும் மக்கள் மொழி பிட்கேர்ன். இது 18ஆம் நூற்றாண்டு ஆங்கிலமும், தகிதி மொழியும் கல்ந்த கலவை. இருமொழிகளும் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. கிறித்துவ ஆலயத்திற்கு 8 பேர் மட்டுமே தவறாது வழிபடச்செல்வதால் ஆலயத்தை மூடிவிட்டனர்.



ஹெண்டர்சன் தீவு

கடன் அட்டைகள் இங்கு செல்லா. தானியங்கி காசு வழங்கும் கருவிகள் இல்லை.அஞ்சலகம் உண்டு. மின்சாரம் டிசல் ஜெனரேட்டர்கள் வழியாக, காலை 8-1 மாலை 5-10 மட்டுமே விநியோகம். குறிப்பிட்ட சில அலைவரிசைகளில் மட்டும் தொலைக்காட்சி, வானொலி இயங்கும். நியூசிலாந்து நாட்டுத் தொலைபேசியும், நாணயமும் இங்கும் பயன்படுத்தப்படுகின்றன. இணைய வசதி உலகத்தொடர்பை தீவுக்குள் கொணர்கிறது.'மிசிலேனி' என்ற ஆங்கில மாத இதழ் நடத்தப்படுகிறது.

உலகின் மிகச்சிறிய குடியரசு மட்டுமன்றி பெண்களுக்கு வாக்குரிமை முதலில் வழங்கிய நாடுகளில் இதுவும் ஒன்று. அரசியல் கட்சிகள் இல்லை. 10 பேர்கொண்ட ஆட்சிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட 4 பேர் ஆட்சியை நடத்துகிறார்கள். மேயர் தான் நாட்டின் அதிகாரமிக்க தலைவர். 2004 இல் பிரண்டா கிறிஸ்டியன் என்று பெண், முதல் பெண் மேயராகத் தேர்வானார்.


கிளர்ச்சியாளர் பிளட்ஜர் கிறிஸ்டியனின் 7வது தலைமுறை பேரன் மனைவியுடன்

ஒரு காலத்தில் நடனம், பொதுவிடத்தில் அன்பை வெளிப்படுத்தல், புகை, மது இவற்றிற்கு இருந்த தடை அண்மைக்காலத்தில் தளர்த்தப்பட்டது.ஒழுக்கம் சீர்கெட்டது.2004 இல் பாலியல் குற்றச்சாட்டில் ஈடுபட்டதாக முன்னாள் மேயர் ஸ்டீவ் கிறிஸ்டியன், இந்நாள் முதல்வர் மைக் வாரன் உட்பட 13 பேர் குற்றஞ்சாட்டப்பட்டனர். இங்கு 12வயதுக்கு மேற்பட்ட பெண்கள் யாரும் பாலியல் வன்முறைக்குத் தப்பவில்லை. இங்கிலாந்திலும், நியூசிலாந்திலிருந்தும் வழக்கறிஞர்களும், நடுவர்களும் வந்து பல காலம் நடத்திய விசித்திர பாலியல் வக்கிரங்கள் நிறைந்த வழக்கில் இந்நாள் மேயர் மட்டுமே குற்றவழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். நாட்டில் கால்வாசிபேர் தண்டனைக்குரியவர்களானதால், உழைக்கும் நபர்களின்றி பெரும் நெருக்கடி ஏற்பட்டது. குற்றவாளிகளை வைத்தே பாப்ஸ் வாலி என்ற இடத்தில் சிறையைக்கட்டிப் பலருக்கு 4 ஆண்டுகள் சிறையும், சிலருக்கு 300-400 மணி நேர சமூக சேவையும் தண்டனைகளாக வழங்கப்பட்டன. இவ்வளவு பேர் குற்றம் புரிவதற்கான காரணம் அங்குள்ள புவியியல்,சமூக சூழல் மற்றும் மரபுரீதியான பலவீனங்கள் என்று சமூகவியலார் விமர்சிக்கின்றனர். வெளியுலகின் கண்களுக்குப் படாமல் இருத்தல், கட்டுப்பாடில்லா வாழ்க்கைமுறை, மிகுந்த நெருக்கம், குறிக்கோளற்ற சலிப்பான வாழ்க்கை, பலதரப்பட்ட பொழுதுபோக்குகள் இன்மை முதலிய சூழல்களில் வாழ்ந்து பார்த்தால் இவர்கள் மேல் குற்றம் சுமத்துபவரும் இக்குற்றங்களைப்புரியக்கூடும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு இவர்களின் தண்டனைகள் குறைக்கப் பரிந்துரைக்கப்பட்டன. கடந்த அனுவங்களை உள்வாங்கி, 2010-இல் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பிட்கேர்ன் சுற்றுலாத்துறை 5500 கி.மீ தூரத்திலுள்ள நியூசிலாந்தின் பெருநகரான ஆக்லாந்திலிருந்து இயங்குகிறது. சுற்றுலாத்துறைக்குச்சொந்தமான எம்.வி கிளேமார்-11 என்ற சிறு கப்பல் 12 பயணிகளை 2 குளிர்விக்கப்பட்ட அறைகளில் தங்கவைக்கும் வசதியுடன் பயணிக்கிறது. ஆக்லாந்திற்குப் தொலைப்பேசி வழியாகவோஅல்லது, மின்னஞ்சல் வழியாகவோ விசாவும், கப்பல் பதிவும் செய்து கொள்ளலாம். (பேசி: +6493660186, மின்னஞ்சல்: adnin@ pitcarin.gov.pn)இந்தக் கப்பல் தென்பசிப்பிக் கடலிலுள்ள பிரஞ்சு பாலினேஷியாவிலுள்ள காம்பியர் தீவிலுள்ள மாங்காரேவாவிலிருந்து 32 மணிநேரப்பயணத்தில் 530 கி.மீ தூர பிட்கேர்னை அடையும். ஒவ்வொரு செவ்வாய் மதியமும் கப்பல் கிளம்பி வியாழன் காலை பிட்கேர்னை அடைந்து மீண்டும் சனிக்கிழமை மதியம் பிட்கேர்னிலிருந்து திங்கள் மதியம் மாங்காரேவா வந்து சேரும். தகிதியிலிருந்து விமானம் மூலம் மாங்காரேவா அடையலாம். நியூயார்க், பாரிஸ், லாஸ்ஏஞ்சலஸ்,சிட்னி, டோக்கியோ ஆகிய நகரங்களிலிருந்து தகிதிக்கு விமானம் உண்டு.மாங்கரேவா - பிட்கேர்ன் இருவழி கப்பல் கட்டணம் 5000 நியூசிலாந்து டாலர்கள்.




நீள் படகில் கப்பலைநோக்கிச்செல்லும் தீவினர்

பிட்கேர்னின் பவுண்டி பே துறையைச் சிறு கப்பல் தொட்டவுடன் இன்முகத்துடன், தீவினர் வந்து விருந்தினரை அழைத்துச்சென்று அவர்கள்

வீட்டோடு இணைந்த விருந்தினர் அறையில் தங்கவைத்து வீட்டிலிருந்து உணவும் வழங்குவர். இதற்குக்கட்டணம் ஒரு நாளைக்கு $70. நிறைய பேர் வந்தால் தங்க, 3அறைகள் கொண்ட விருந்தினர் இல்லங்களும் உண்டு. மருத்துவ வசதிகள் இங்கு குறைவு என்பதால் தேவையான மருந்துகளுடன், வரவேண்டும். அவசரமாக வெளியேற முடியாது. பக்கத்து பெருநகரமான (பிரஞ்சு பாலினேசியத் தலைநகரும், தகிதி தீவில் உள்ளதுமான) பாப்பிடீ 2111 கி.மீ தொலைவில் உள்ளது. ஆடம்பஸ் டவுனில், துன்ப மலை(Hill of difficulty) என்ற குன்றின் மேல் ஒரு கூட்டுறவுப்பண்டக சாலையும், வன்பொருள் கடையும்(Hardware shop)வாரத்திற்கு 3 நாள் மட்டும் திறந்திருக்கும். பெரிய கடைத்தொகுதிகள் இல்லை. ஒரே உணவு விடுதியான கிறிஸ்டியன்ஸ் கபே வெள்ளியன்று மாலை6.30 லிருந்து நள்ளிரவு வரை திறந்திருக்கும். அதனுடன் மதுக்கடையும் இணைந்துள்ளது. பிரவுன்ஸ் பேக்கரி 2வது வியாழன் மாலை 5 மணிக்குத் திறந்து ரொட்டியை புதிதாக தயாரித்து வழங்கும். பெரிய பர்கர் விற்கும் பவுண்டி டிலகடபிள் என்ற உணவு விடுதி புதன் மட்டும் இயங்கும். பெட்டீஸ் பேக்கரி ஆர்டர் தந்தால் மட்டும் தயாரித்துத்தரும். ஜாக் கிறிஸ்டியன் என்பார் பாலினேசிய லோமி லோமி மசாஜ் மற்றும் பொக்காகு சூடான கல் மசாஜ் செய்வார். பிட்கேர்ன் சமையலுக்கு என்று தனிச்சுவை உண்டு. 'பிட்கேர்ன் சுவை' என்ற பெயரில் தீவினர் ஒருவர் எழுதியுள்ள சமையல் நூல் இந்த நாட்டிற்கே உரிய தனித்தன்மையான சில உணவு வகைகளை விளக்குகிறது.

'குவாட் பைக்' என்ற 4 சக்கர வாகனத்தில் 3.2 கி.மீ நீளமும 1.6 கி.மீ அகலமும் கொண்ட இந்த 'நாட்டை'ச் சுற்றி வரலாம். மெதுவாக நடந்து மாசற்ற இயற்கையில் இயைந்து மகிழும் வண்ண மலர்களையும், பறவைகளையும், விலங்குகளையும் கண்டு பூரிக்கலாம். கடலின் கண்ணாடி நீரில் நீர்மூழ்கியாடையணிந்து கண்கொள்ளாக்காட்சியளிக்கும் மீன்களையும், நீர்வாழ் தாவரங்களையும் கண்டு மெய்மறக்கலாம். 347 மீட்டர் பாறையாக உயர்ந்த பிக்ரைட் மலைமுடியின் பேருவத்தைக் கண்டு வியக்கலாம். தீவின் இறந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும் கண்முன் நிறுத்தும் பிட்கேர்ன் அருங்காட்சியகத்தில் அரியவற்றை அறிந்து மகிழலாம் . பிட்கேர்ன் தீவுகளில் மிகப்பெரிதான, ஹெண்டர்சன் தீவு 300 கி.மீ தூரத்தில் உள்ளது மனிதர்களே வாழாத, இயற்கை தன்னிச்சையாக இயங்கும், இந்த யுனேஸ்கோ உலக பராம்பரிய இடத்திற்குத் தனி ஏற்பாட்டுடன் சாகச பயணம் செய்யலாம். பிட்கோர்ன் வெப்பமண்டலத்தில் உள்ளதால் கடுமையான வெயில், குளிர், மழையில்லா மிதமான தட்பவெப்பநிலை எப்போதும் நிலவி இதமளிக்கிறது.



தீவைச்சேர்ந்த ஜெ,காரல் வாரன் குடும்பத்தினர்.

இந்த அனுபவங்களுக்காக உலகநாடுகளிலிருந்து பலரும் இங்கு வந்தவண்ணம் உள்ளனர். சிலர் இவர்களோடு இருந்து பார்க்கும் ஆர்வத்தோடு சில மாதங்கள் தங்கி மகிழ்கின்றனர். மருத்துவ சேவைக்காகவும், ஆய்வு நடத்தவும் ஆண்டுகணக்கில் இங்குச் செலவிடும் அயல்நாட்டவர்களும் உண்டு. பவுண்டி கலகத்தையும், பிட்கேர்னையும் அடிப்படையாக வைத்து இதுவரை 5 திரைப்படங்கள் வந்துள்ளன.(நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு முன்னோடியான மார்லன் பிராண்டோ நடித்த *பவுண்டியில் கலகம்* என்ற படம் பெரும்புகழ் பெற்றது.) நூற்றுக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பிட்கேர்னை வைத்து பாடப்படும் இசைத்தட்டுகளும் வெளிவந்துள்ளன.பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் பிட்கேர்ன் ஆய்வு நிலையங்கள் செயல்பட்டுவருகின்றன.

வியக்கத்தக்க சமூக பரிசோதனைக்கூடமாக விளங்கும் பிட்கேர்னின் எதிர்காலம் கணிக்கமுடியாமலிருக்கிறது. (*வெற்றி வேந்தன்; அக்டோபர்* 2015)